## IV. ஆளணி

ஆட்சியாளரான திரு. டி. டபிள்யூ. இராஜபத்திரன சர்வதேச நாணய நிதியில் இலங்கையினது மாற்றீட்டு ஆட்சியாளர் என்ற முறையில், சர்வதேச நாணய நிதியினதும், சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கியினதும், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தினதும், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினதும் வருடாந்தக் கூட்டங்களிற் பங்கு பற்றுவதற்காக புரட்டாதி 24, 1963டில் வாஷிங்டனுக்குச் சென்ருர். அவர் ஐப்பசி 11, 1963டில் இலங்கை திரும்பினுர்.

ஆட்சியாளர், 1963ம் ஆண்டு தை மாதத்தில் கராச்சியில் நடைபெற்ற தெ.கி.ஆ.நி.அ. ஆட்சியாளர் சபையின் ஐந்தாவது மகாநாட்டுக்குச் சென்ருர். அவர் தை 28, 1963டில் கராச்சிக்குச் சென்று, மாசி 7, 1963டில் இலங்கை திரும்பினுர்.

1963ம் ஆண்டுத் தொடக்கத்தில் நாணயச்சபையின் அரசாங்க அங்கத்தவர் பதவியில் இருந்த திரு. எச். எஸ். அமரசிங்காவுக்குப் பின், ஆனி 11, 1963டில் திரு. எச். ஈ. தென்னக்கூன் இப்பதவியை ஏற்ருர். திரு. எச். ஈ. தென்னக்கூனுக்குப் பின்னர் மார்கழி 19, 1963 முதல் திரு. எச். ஜே. சமரக்கொடி இப்பதவியையேற்ருர்.

திரு. எச். எஸ். அமரசிங்காவும், திரு. எச். ஈ. தென்னக்கூனும் முறையே, 1963ம் ஆண்டு சித்திரை 30லிருந்து வைகாசி 25 வரையிலும், 1963ம் ஆண்டு புரட்டாதி 23லிருந்து ஐப்பசி 20வரையிலும் இல்லாதிருந்த போது, அவர்களுக்காகத் தற்காலிகமாக திரு. வி. எஸ். எம். டிமெல் நாணயச் சபையின் அரசாங்க அங்கத்தவராகப் பணியாற்றினுர்.

உபஆட்சியாளரான திரு. டபிள்யூ. தென்னக்கூன் வாஷிங்டனிலுள்ள சர்வதேச நாணய நிதியில் மாற்றீட்டு நிர்வாக இயக்குநராக 1963ம் ஆண்டினபோது தொடர்ந்தும் கடமையாற்றினுர். ஆட்சியாளருக்கு உதவியாளரான திரு. டி. சி. குணசேகர தொடர்ந்தும் தற்காலிக உபஆட்சியாளராகக் கடமையாற்றினுர்.

ஆட்சியாளருக்கு உதவியாளரான திரு. பி. எம். ஜயராஜன், பங்குனி 1, 1963டில் மகாவங்கியின் சேவையிலிருந்து ராஜினுமாச் செய்தார். டாக்டர் காமினி கோறியா பொருளாதார ஆராய்ச்சிப் பகுதியின் இயக்குநராக உள்ள தமது கடமைகளோடு, சித்திரை 1, 1963 முதல் ஆட்சியாளருக்கு உதவியாளராகவும் நியமிக்கப்பட்டார். அதே திகதி முதல், நாணயச் சபையின் காரியதரிசியாகவும், மகாவங்கியின் காரியதரிசியாகவும் உள்ள தமது கடமைகளோடு திரு. ஏ. எச். அபயநாயக ஆட்சியாளருக்கு உதவியாளராகக் கடமையாற்றவும், திரு. எஸ். ஈ. பி. ஜான்ஸ் செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியாகக் கடமையாற்றவும் நியமிக்கப்பட்டனர்.

உணவு, விவசாய சபை விடுத்த அழைப்பிற்கிணங்க டாக்டர் காமினி கோறியா, ''விவசாயத்துறையில் ஜப்பானுடைய அனுபவம் ஆசியாவிலுள்ள ஏனைய நாடுகளுக்கு எவ்வகையிற் பொருந்தும்'' என்பது பற்றி ஆராய்வதற்காகக் கூடும் ஒரு நிபுணர்கள் குழுவிற் பங்குபற்றுவதற்காக டோக்கியோவுக்குத் தை 20, 1963டிற் சென்று, மாசி 6, 1963டில் இலங்கை திரும்பினுர். ஆசிய தூரகிழக்கு தேசப் பொருளாதார ஆலோசனைச்சபையின் நிர்வாகக் காரியதரிசியின் வேண்டுகோளுக்கிணங்க டாக்டர் கோறியா, 1963ம் ஆண்டு ஆனி 29ம் திகதிக்கும் ஆடி 15ம் திகதிக்கும் இடையில் ஜெனிவாவில் நடைபெற்ற வர்த்தகமும் அபிவிருத்தியும் என்ற பொருள் மீதான ஒரு கூட்டத்திற் பங்கு பற்றினுர்.

வர்த்தகமும் அபிவிருத்தியும் பற்றிய ஐக்கிய நாடுகள் மகாநாட்டின் பொதுக்காரியதரிசிக்கு ஆலோசகராகச் செயலாற்றும் பொருட்டு டாக்டர் கோர்றியாவுக்கு 1963ம் ஆண்டு புரட்டாதி 27லிருந்து, 1964ம் ஆண்டு தை 7வரை ஐக்கிய நாடுகள் சபையில் பணியாற்ற அநுமதியளிக்கப் பட்டது.

வங்கி மேற்பார்வைப் பகுதி இயக்குநரான திரு. பீ. வி. எம். பெர்ஞன் டோ, 1963ம் ஆண்டு புரட்டாதி 17லிருந்து மார்கழி 20வரை நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 18வது கூட்டத் தொடர்ச்சிக்கு இலங் கைத் தூதுகோஷ்டியில் ஒரு அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

பொருளாதார ஆராய்ச்சித்துறையின் மேலதிக உப இயக்குநரான திரு. எஸ். கணேசதாசன், பாங்காக்கில் நடைபெற்ற ஆசிய தூரகிழக்கு தேசப் பொருளாதார ஆலோசனைச் சபையில் ஐ.நா.வின் ஆலோசகராகச் செயலாற்ற அநுமதியளிக்கப்பட்டார். அவர், 1963ம் ஆண்டு புரட்டாதி 17லிருந்து, 1964ம் ஆண்டு தை 13வரை இப்பணியின் நிமித்தமாக வெளி நாட்டிலிருந்தார்.

பொருளாதார ஆராய்ச்சித்துறையின் மேலதிக உப இயக்குநரான டாக்டர் எஸ். பி. டி. டிசில்வா, மனிலாவிலும், பிலிப்பைன்ஸிலும் நடை பெற்ற ஆசிய தூரகிழக்கு தேசப் பொருளாதார ஆலோசனைச் சபையின் 19வது கூட்டத் தொடர்ச்சியில் மாற்றீட்டு அங்கத்தவராகப் பங்கு பற்றினர். இதன் காரணமாக 1963ம் ஆண்டு பங்குனி 5லிருந்து பங்குனி 27வரை அவர் வெளிநாடுகளிலிருந்தார்.

திரு. எம். பீ. பெரேரா, 1963ம் ஆண்டு புரட்டாதி 17லிருந்து மார்கழி 20வரை நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் 18வது கூட்டத் தொடர்ச்சியில் இலங்கைத் தூதுகோஷ்டிக்கு அறிவுறுத்துவோராக அரசாங்கத்தினல் நியமிக்கப்பட்டார்.

மீளப்பார்வையிடும் வருடத்தின்போது, கீழ்க்காணும் மகாவங்கி உத்தியோகஸ்தர்கள் அரசாங்கத்திற்குக் கடனுகப் பணியாற்றவோ அல்லது தொடர்ந்தும் அரசாங்கத்திற்குச் சேவை செய்யவோ விடப் பட்டார்கள்:—

திரு. பீ. எச். சிரிவர்தன தேசிய திட்ட இயக்குநராகத் தொடர்ந்து அரசாங்க சேவையிலிருந்தார்.

டாக்டர் டபிள்யூ. எம். திலகரத்ன இலங்கை நிலஎரி எண்ணெக் கூட்டுத் தாபனத்தின் வர்த்தக மனேஜராகப் பணியாற்றுவதற்கு அனுமதியளிக்கப் பட்டார்.

டாக்டர் எம். ஆர். பீ. சல்காடோ விவசாய உணவு கூட்டுறவு அமைச் சுக்குப் பணியாற்ற அநுமதியளிக்கப்பட்டார்.

திரு. பீ. பி. கரந்தவெல நிதியமைச்சுக்குப் பணியாற்ற அநுமதியளிக் கப்பட்டார்.

மகாவங்கி உத்தியோகத்தர்கள் பலர், அரசாங்கத்தினல் நியமிக்கப் பட்ட பலதரப்பட்ட குழுக்களில் பங்குபற்றி அரசாங்கத்துக்குத் தொடர்ந் தும் சேவை செய்தனர்.